**அசல் வழக்கு எண்: 121/2023**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 18th day of September 2025
வா.சா.1. பாலாஜி, த/பெ. தாந்தோணி.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிறந்ததில் இருந்து பூசிமலைகுப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி ரகோத்தமனை சிறுவயதில் இருந்தே எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இந்த வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதில்உரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன். தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்த போது பிரதிவாதி பதில்உரையை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் அப்போதும் படித்தேன். தற்போது என்னால் ஞாபகப்படுத்தி சொல்ல இயலவில்லை. நான் எனது பிராதை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்த போது படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரங்களை சில வற்றை என்னால் சொல்ல இயலும். சிலவை ஞாபகம் இல்லை. நான் எனது பிராதில் பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கார் ஓட்டுனராக வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் மற்றும் பிராதில் 15.08.2017ம் தேதி இத்துடன் வைத்த கடனுறுதி சீட்டை பிரதிவாதி எழுதிக் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் தாவா புரோ நோட்டை சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா புரோ நோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு என்ன வருமானம் வருகிறது என்றும் அவருக்கு உள்ள சொத்துக்கள் குறித்து பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் முதல் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளவர் என் உடன் பிறந்த தங்கை இந்துமதி ஆகும். அதில் 2வதாக சாட்சி கையெழுத்து செய்துள்ளது என் மூத்த சகோதரி பத்மாவதி ஆகும். வா.சா.ஆ.1 எழுதியது என்று குறிப்பிட்டு கையெழுத்து செய்துள்ளது முருகன் ஆகும். அவர் தான் வா.சா.ஆ.1 புரோ நோட் எழுதினார். பிரதிவாதி ரகோத்தமன் வா.சா.ஆ.1 புரோநோட்டை எழுதவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பெயரில் சொத்து உள்ளது சம்மந்தமாக ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை. எங்கள் கிராமத்தில் பெரும்பாலும் விவசாய வேலை செய்பவர்கள் உள்ளார்கள். நான் பொதுவாக எங்கள் கிராமத்தில் கடன் கொடுப்பது வழக்கமா என்றால் தெரிந்தவர்களுக்கு மட்டும் கடன் கொடுத்து உதவுவேன். நான் பிரதிவாதி தவிர்த்து தரணி முருகன் என்பவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். பிரதிவாதிக்கு மட்டும் 3 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 25.12.2016 மற்றும் 23.04.2017 ம் தேதிகளில் தலா ரூ.1 லட்சம் என்னிடம் வாங்கிய தொகைக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும 04.09.2019 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பு **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் என்னிடம் காட்டப்படும் 27.01.2020 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பு **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 11.07.2020 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பும் நான் பிரதிவாதிக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி பெயரில் எந்த சொத்தும் கிடையாது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தனியார் ஓட்டுனராக பணிபுரிந்து மாதம் ரூ.12,000/- சம்பாதிக்கிறார் என்றால் ஆமாம். நான் பிரதிவாதிக்கு 25.12.2016, 23.04.2017, 15.08.2017 ஆகிய தேதிகளில் முறையே ஒரு லட்சம், ஒரு லட்சம் மற்றும் ஒருலட்சத்தி இருபதாயிரம் கடன் கொடுத்ததாக அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் பிரதிவாதிக்கு மேற்கண்ட தேதிகளில் பணம் வாங்குவதற்கு எவ்வித அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. நான் அனுப்பிய பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பில் 4 ம் பத்தியில் நீங்கள் என் தரப்பினரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படுகின்றீரோ என என் தரப்பினருக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த அறிவிப்பில் மேலும் 2 பாண்டு பத்திரங்கள் பிரதிவாதி எழுதிக் கொடுத்ததாக தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. அதே வாசகங்கள் பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு வழக்கறிஞர் அறிவிப்பிலும் ஏற்கனவே பிரதிவாதி

பாண்டு பத்திரம் எழுதிக் கொடுத்த விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கும் போதும் பிரதிவாதி மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிராதில் பிரதிவாதி 25.12.2016 மற்றும் 23.04.2017 ம் தேதி தலா ஒரு லட்சம் கடன் பெற்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் தான் முதல் முறையாக மேற்கண்ட கடன் தொகைகளை பிரதிவாதி திருப்பி கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதிகளில் எவ்வளவு தொகை கொடுத்து பைசல் செய்தார் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதி மிகுந்த சிரமத்திற்கு இடையே கொடுத்த கடனை திருப்பி கொடுத்ததாக எனது பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தனது பதில் வழக்குரையில் தான் வாதியிடம் ஏற்கனவே எந்த கடனும் பெறவில்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பின் 9 வது பத்தியில் கூறியுள்ள சங்கதிகளை மறுப்பதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பதில் அறிவிப்பு பிரதிவாதி கொடுத்துள்ளாரா என்றால் தெரியவில்லை. நான் எனது 3 வழக்கறிஞர் அறிவிப்பிலும் பிரதிவாதியை அனுகி அசல் தொகையை மட்டுமாவது திருப்பி கொடுக்கும்படி கேட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட 3 அறிவிப்புகளிலும் பிரதிவாதி வீடு அல்லது அசையா சொத்தினை வழக்கில் இணைத்து நீதிமன்றம் மூலம் ஏலம் , ஜப்தி செய்து என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி தனது பதில் வழக்குரையில் தான் ரூபாய் இருபதாயிரம் மட்டும் கடன் பெற்று அதற்கு நாற்பதாயிரம் வரை வட்டி மட்டும் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் இருக்கலாம். 2018 ம் வருடம் பிரதிவாதி தான் வாங்கிய கடன் தொகைக்காக மேலும் வட்டி சேர்த்து ரூ.50,000/– நான் புரோநோட் எழுதி வாங்கி கொண்டதாக பதில் உரையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். பதில்உரையில் ஒரு எழுதப்படாத தாளில் முத்திரை ஒட்டி அதில் நான் கையெழுத்து வாங்கி உள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்கண்ட கடனுறுதி சீட்டுகளை பயன்படுத்தி தான் நான் வழக்கறிஞர் அறிவிப்புகள் அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் பிரதிவாதியின் வீடு மற்றும் அசையா சொத்துக்களை நீதிமன்றம் மூலம் ஜப்தி செய்வதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை

எழுதியதாக சொல்லும் முருகன் என்பவர் நீதிமன்றத்தில் வந்து சாட்சி சொல்வாரா என்றால் சாட்சி சொல்வார். உண்மையில் பிரதிவாதி என்னிடம் பல்வேறு தவணைகளில் ரூ, 3,20,000/- வரை கடன் பெறும் அளவுக்கு அதற்கு 36 சதவீதம் வட்டி கொடுப்பதற்கு வருமானம் சம்பாதிக்கும் நபர் கிடையாது என்றும் அதை திருப்பி கொடுக்கும் திறனும் அவருக்கு கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதி பூர்த்தி செய்யப்படாத வெற்று தாளில் முத்திரையில் கையெழுத்து செய்து கொடுத்தார் என்றும் அதை பயன்படுத்தி வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு இந்த வழக்கிற்காக என்னால் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான வழக்கறிஞர் அறிவிப்பில் கடன் கொடுத்த தேதி, தொகை தவிர்த்து வேறு வாசகங்கள் அனைத்தும் ஒரே மாதிரி தான் உள்ளன என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் எழுதிக் கொடுத்த மேலும் ரூ.50,000/-க்கான புரோ நோட் என்னிடம் உள்ளது என்றால் அப்படி எதுவும் இல்லை. அந்த ரூ.50,000/- புரோ நோட்டை நான் கிழித்து போட்டுவிட்டேன். பிரதிவாதி எனக்கு வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் எந்த கடன் தொகையும் கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது, மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |